TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

under Section 173 BNSS (Under Section 154 Cr.P.C.) குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்

C 8129303

1 District மாவட்டம்: Tenkasi
PS காவல்நிலையம்: Vigilance and Anti-Corruption Tenkasi
Year ஆண்டு: 2025
FIR No. மு.த.அ. எண்: 02/2025
Date நாள்: 20.01.2025

2 (i) Act சட்டம்
Sections பிரிவுகள்

(ii) Act சட்டம்
Sections பிரிவுகள்

(iii) Act சட்டம்: PC Act 1988 as Amended in Act 16 of 2018
Sections பிரிவுகள்: 7

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3 (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 20.01.2025
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 11.45 hrs
Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.01.2025
Time : நேரம் 15.45 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 20.01.2025
Time : நேரம் 15.45 hrs

4 Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
Written

5 Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
Village Administrative office,
Rajagopalaperi Village,
25 Km North East

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6 Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S.Kumaravel
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.Subbiah
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 19.02.1973
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Former
(g) Address : முகவரி
174, Pillaiyar Kovil street,
Kalingapatti, V.K.Pudur Taluk,
Tenkasi District

7 Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**Tmt.Padmavathi, Village Administrative officer, Rajagopalaperi Village, V.K.Pudur Taluk, Tenkasi District.**

8 Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**No Delay**

240-3--Pol B FIR Type-2--1046 Bundle--25-2-2022--[HP-39]

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

**Not arise**

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கிறேன். இன்று 20.01.2025 ஆம் தேதி மாலை 15.45 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் C.ஜெயஸ்ரீ ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது தென்காசி மாவட்டம், வீ.கே.புதூர் தாலுகா. கலிங்கப்பட்டியை சேர்ந்த திரு.சு.குமாரவேல் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட ராஜகோபாலபேரி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திருமதி.பத்மாவதி பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 20.01.2025 ஆம் தேதி மாலை 16.45 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2025 u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended in Act 16 of 2018 என வழக்கு பதிவு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ...................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
**20.01.2025 at 17.30 hrs**

Name பெயர் **C.JAYASREE**
Rank நிலை **Inspector of Police, V&AC, Tenkasi.**

செய்தேன். அனுப்புநர் சு.குமாரவேல், வயது 52/25, த/பெ சுப்பையா நாடார், க.எண்.174 பிள்ளையார்கோவில் தெரு, கலிங்கப்பட்டி, வீரகேரளம்புதூர் தாலுகா, தென்காசி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தென்காசி. அய்யா, நான் தென்காசி மாவட்டம், வீரகேரளம்புதூர் தாலுகா, கலிங்கப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து செய்து வருகிறேன். எனது அப்பா சுப்பையா நாடார்,அவர்களுக்கு சுரண்டை சார்பதிவக நன்கொடை ஆவண எண்.126/1975-ன் பிரகாரம் பாத்தியப்பட்ட இராஜகோபாலப்பேரி கிராம நத்தம் சர்வே எண்.30-ல் 1.27 ஏர் பரப்பில் வீடு உள்ளது. எனது அப்பா சுப்பையா நாடார் கடந்த 18.06.2005 ஆம் தேதியில் இறந்து விட்டார். எனது அம்மா 18.10.2007 ஆம் தேதியில் இறந்து விட்டார். மேற்படி வீட்டில் தற்சமயம் நான்தான் குடியிருந்து வருகிறேன். எனது அப்பாவிற்கு நானும்,எனது அக்காள் களஞ்சியமும் வாரிசுகள் ஆவோம். மேற்படி சொத்திற்கு பட்டா எனது தந்தை சுப்பையா நாடார் பெயரில் இருப்பதால் வாரிசுதாரர்களான எனது மற்றும் எனது அக்கா பெயரில் பட்டாவில் பெயர் மாற்றம் செய்வது சம்பந்தமாக 06.01.2025 ஆம் தேதி அன்று ராஜகோபாலபேரி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று விஏஓ பத்மாவதி அவர்களை சந்தித்து விபரம் கேட்டேன். அவர் வீரகேரளம்புதூர் தாலுகா அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையம் மூலம் சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் ஆன்லைனில் விண்ணப்பிக்க சொன்னார். அதன்பேரில் நானும் அன்றையதினம் வி.கே.புதூர் தாலுகா அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்திற்கு சென்று பட்டா பெயர் மாறுதலுக்கு ஆன்லைனில் விண்ணப்பித்தேன். பின்னர் இரண்டு நாட்கள் கழித்து 08.01.2025 ஆம் தேதி ராஜகோபாலபேரி விஏஓ அலுவலகத்திற்கு சென்று விஏஓ பத்மாவதி அவர்களை சந்தித்து பட்டா பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளேன் என்று சொன்னேன். அவர் விண்ணப்பம் செய்யும் போது சமர்ப்பித்த அனைத்து ஆவணங்களின் நகல்கள் வேண்டும் என்று கேட்டார். நானும் ஆவணங்களை நகல் எடுத்து நாளை கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் மறுநாள் விஏஓ கேட்ட ஆவணங்களின் நகல்கள் எடுத்துக்கொண்டு 09.01.2025 ஆம் தேதி பகல் 11.50 மணியளவில் ராஜகோபாலபேரி விஏஓ அலுவலகம் சென்று விஏஓ பத்மாவதி அவர்களை சந்தித்து ஆவணங்களின் நகல்களை கொடுத்தேன். அப்போது விஏஓ பத்மாவதி பட்டா மாறுதலுக்காக 10,000/- ரூபாய் செலவு ஆகும் என்று சொன்னார். நான் பொங்கல் வருகிறது, என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். அதற்கு விஏஓ 5000/- ரூபாய் கொடுங்கள் என்று கேட்டார். நான் என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது, கஷ்டத்தில் இருப்பதாக சொன்னேன். அதற்கு விஏஓ அவர்கள் சரி ஒரு 500 ரூபாய் குறைத்து 4,500/- ரூபாய் கொடுங்கள் முடித்து விடலாம்,

இதற்குமேல் குறைக்க முடியாது என்று கறாராக சொல்லிவிட்டு, பணம் தரவில்லையென்றால் பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்ய முடியாது என்று சொன்னார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்பு நான் இன்று 20.01.2025 ஆம் தேதி காலை 11.45 மணியளவில் ராஜகோபாலபேரி விஏஓ அலுவலகத்திற்கு சென்று விஏஓ பத்மாவதி அவர்களை சந்தித்து பட்டா பெயர் மாற்றத்திற்கு பரிந்துரை செய்வது குறித்து கேட்டபோது அவர் நான் கேட்ட பணம் ரூ.4,500/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் பணம் கொண்டு வரவில்லை என்று சொன்னதும், அவர் தாலுகா அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு பணம் கொடுத்தால்தான் பட்டா பெயர்மாற்றம் செய்வார்கள். அதனால் நான் கேட்ட பணம் ரூ.4,500/-ஐ நாளை காலை கொண்டு வந்தால்தான் பரிந்துரை செய்து அனுப்புவேன் என்று கறாராக சொல்லிவிட்டார். நானும் வேறு வழியின்றி சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில்,எனது அப்பாவின் பெயரில் உள்ள பட்டாவை எங்கள் பெயருக்கு மாற்றித்தர பரிந்துரை செய்வதற்கு விஏஓ விற்கு எதற்கு பணம் கொடுக்க வேண்டும்,எனவே லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கலாம் என முடிவு செய்தேன். என்னிடம் பட்டா பெயர் மாறுதலுக்கு லஞ்சமாக ரூ.4,500/- பணம் கேட்ட விஏஓ பத்மாவதி மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd. 20.01.2025 S.Kumaravel)

Sir, Received the Petition on 20.01.2025 at 15.45 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.02/2025 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 20.01.2025 at 16.45 hrs. sd.C.JAYASREE, Inspector of Police, V&AC, Tenkasi.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தென்காசி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

20/1/25

**INSPECTOR OF POLICE**
**Vigilance & Anti Corruption**
**TENKASI.**